முதல்வரின் தொடர் சீரிய நடவடிக்கையால் – கிராம – நகர்ப்புறங்களுக்கு

கூட்டுறவு சங்கங்கள் முதுகெலும்பாக விளங்குகின்றன!

தஞ்சையில் நடைபெற்ற கூட்டுறவு விழாவில் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேச்சு

தஞ்சை, நவ. 21 -

தஞ்சையில் நடைபெற்ற 71-வது அனைத்திந்திய கூட்டுறவு விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:-

71-ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாட்டத்திற்கு என்னை அழைத்தமைக்கு முதற்கண் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு குறித்து இந்த கூட்டுறவு வார விழா 04.11.2024 முதல் நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் முன்னாள் பிரதமர் பண்டித ஜவர்ஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தேசிய கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கூட்டுறவு என்பது பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட ஒரு துறை. கூட்டுறவுக்குச் சின்னமாக வானவில்லின் வண்ணத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. வானவில்லில் பல வண்ணங்கள் ஒன்று கூடி இருப்பதைப் போல இந்தக் கூட்டுறவு இருக்க வேண்டும். அதிலே காணுகின்ற அந்தப் பொலிவும் எழிலும் இந்தக் கூட்டுறவுத் துறையிலேயும் இருந்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு வானவில் லோகோ (Logo) அமைக்கப்பட்டது.

கூட்டுறவு என்பது காகங்கள் கூடி, இருப்பதைப் பகிர்ந்துகொண்டு போவது போல் அல்ல; கூட்டுறவு, காகங்கள் கூடுவதுபோல் இருக்கக் கூடாது. கூட்டுறவு மேகங்கள் கூடுவதைப் போல் இருக்க வேண்டும்.

மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக, அதுபோல மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காக, கூட்டுறவு இருக்க வேண்டும். அந்த வகையிலே இந்தக் கழக ஆட்சியில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில் செயல்படும்" என்று குறிப்பிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்.

கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குவதோடு, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் கடன் பெறுவதற்கான வாய்ப்பு வழங்குகிறது. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக தமிழ்நாடு போற்றப்படுகிறது.

இந்தியாவின் முதல் கூட்டுறவு கடன் சங்கம் 1904-ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் திரூரில் தொடங்கப்பட்டது. அதனை நினைவு கூறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் திரூரில் ரூ.1 கோடி செலவில் கூட்டுறவு அருங்காட்சியகம் அமைக்க உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அரசின் புதிய செயல் திறன்மிகு திட்டங்கள் மூலம் கூட்டுறவை வலுப்படுத்துதல், காலத்திற்கு ஏற்ப கூட்டுறவின் புதிய முயற்சிகள் தொழில்நுட்பங்கள் மூலம் சிறந்த நிர்வாகம், கூட்டுற வின் மூலம் சுய தொழில் மேம்பாடு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் திறன் மேம்பாடு, இன்றைய சூழலுக்கு ஏற்ப கூட்டுறவு நிறு வனங்களை நவீனமயமாக்குதல், கூட்டுறவுகளிடையே ஒருங்கிணைப்பையும், பங்களிப்பையும் வலுப்படுத்துதல், பெண்கள், இளைஞர்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் நலிந்த பிரிவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கூட்டுறவின் பங்களிப்பு கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குளை அடைதல். ஆகிய தலைப்புகளின் கீழ் இந்த கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகிறது.

மாநில மாவட்ட அளவில் நடைபெறும் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் நற்பயன்களை தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்படும் கடன் விவரம் பயிர் கடன், தானிய ஈட்டுக் கடன், கால் நடை பராமரிப்பு கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிக்களுக்கான கடன், வீடு கட்ட கடன், வீட்டு அடமான கடன், சிறுதொழில் கடன், டாம்கோ, தாட்கோ, டாப்செட்கோ கடன் ஆதரவற்ற விதவைக் கடன்/கைம் பெண் (ம) கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன், பணிபுரியும் பெண்கள் (ம) மகளிர் தொழில் முனைவோர் கடன்,

2006-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ட்சிப்பொறுப்பேற்றவுடன் 7000 கோடி விவசாயக் கடன்களை இரத்து செய்யப்பட்டது.

அவர் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கொரோனா பெருந்தொற்று காலத்திலும் 6000 கோடி நகைக் கடன்களை தள்ளுபடி செய்தார். மகளிர் சுயஉதவிக்குழு கடன்கள் 31.03.2021-இல் நிலுவையில் இருந்த ரூ.2756 கோடி கடன்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

பொங்கல் பண்டிகை முன்னிட்டு 1 கிலோ பச்சரிசி, முழுக்கரும்பு மற்றும் ரூ.1000 கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் 340 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் பயனாளிகள் விவரம்

24-2023-ஆம் ஆண்டில் ரூ.540 கோடி வட்டியில்லா பயிர்கடன் -70,660 விவசாயிகள் பயன் ரூ.33 கோடி வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன் - 10,553 நபர்கள் பயன் 2024-25-ஆம் ஆண்டில் ரூ.270 கோடி வட்டியில்லா பயிர்கடன் -31,989 விவசாயிகள் பயன் ரூ.14 கோடி வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன் - 3,340 நபர்கள் பயன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் 84 திட்டங்கள் 70 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.5 கோடி மதிப்பீட்டில் 79 வேளாண் கருவிகளை குறைந்த வாடகையில் விவசாயிகள் பயன்படுத்த 56 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கூட்டுறவுத் துறையின் கீழ் 177 சேமிப்பு கிடங்குகள் உள்ளன.

14 கூட்டுறவு மருந்தககங்கள் உள்ளன. இந்த நிதியாண்டில் 31.10.2024 வரை ரூ.300 கோடி தொகையிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு ரூ.17 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

1,245 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலம் 7,11,804 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர். 2023-க்குப் பிறகு 1000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் மூலம் ஓரத்தநாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியக் கிடங்கு கட்டப்பட்டது. நாளது வரை ரூ.138 இலட்சம் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

Coop e-வாடகை' செயலி

விவசாய பெருமக்களுக்குத் தேவைப்படும் விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு பதிவு செய்யும் பொருட்டு Coop e-வாடகை' செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் "உழவர் செயலி" மூலமும் தங்கள் வட்டாரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து விவசாய இயந்திரங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

நூற்றாண்டு களைக் கடந்து செயல்படும் செம்மையான அமைப்பாக கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. அவை காலத்தின் தேவைக்கேற்ப தங்களை புதுப்பித்துக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்து கூட்டுறவு நிறுவனங்களை நவீனப்படுத்த தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றது. அவற்றில் குறிப்பிடத் தக்கவை,

அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் கணினிமயமாக்கல், அதன்மூலம் உறுப்பினர்களுக்கு வெளிப்படையான விரைவான தரமான சேவை வழங்குதல்.

மக்களுக்கு தரமான கலப்படமற்ற பொருட்களை நியாயமான விலையில் வழங்கும் வகையில் பதப்படுத்தும் அலகுகள் அமைத்தல்

புதிய கட்டமைப்புகள் உருவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் மூலம் கூட்டுறவு நிறுவனங்களை தொடர்ந்து புத்தாக்கம் செய்தல்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது மாநிலத்தில் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த கூட்டுறவுத் துறை அயராது பாடுபட்டு வருகிறது. இதன் சேவை மேலும் விரிவடைந்து திண்டுக்கல்லில் கூட்டுறவுத் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது.

கல்வி, மருத்துவம் (மலிவு விலையில் கூட்டுறவு மருந்தகங்கள்) இவை இரண்டும் என்னுடைய இரு கண்களாக பாவித்து வருவதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் கூட்டுறவுத் துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டது பாராட்டத்தக்க ஒன்றாகும். கூட்டுறவே நாட்டுயர்வு. இச்சேவை மேலும் வளர என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசினார்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47 வது வட்டத்துக்குட்பட்ட அனைத்து பாகத்திலும் புதிய வாக்காளர் சேர்ப்பு மற்றும் சரிபார்ப்பு பட்டியல் முகாம் வட்ட செயலாளர் ஜி. ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், தேர்தல் பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆய்வு செய்தனர்.வ.பெ.சுரேஷ், இரா. செந்தில்குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், எம்.கோவிந்தராஜ், ஜி.மணிமேகலை எம்.சி, மற்றும் வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஜெகந்நாதபுரம் 2வது தெருவில் புதிதாகத் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தை ஆய்வு செய்து, அம்மையத்திற்குத் தேவைப்படும் கூடுதல் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். இவ்வாய்வின்போது பெருநகர சென்னை மருத்துவ அலுவலர், மண்டல மருத்துவ அலுவலர், உதவிப் பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பாக கழக வேட்பாளராக திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை தொடர்ந்து கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆராஞ்சி, சோமாசிபாடி, கடம்பை, சோ.நம்மியந்தல், ஐங்குணம், காணலாபாடி, கழிக்குளம், கனபாபுரம், வழுதலங்குணம், மேக்களூர், செவரப்பூண்டி, கீக்களூர், கத்தாழம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த மக்களுக்கு தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத்தலைவர் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆராஞ்சி ஆறுமுகம், இரா.ராஜேந்திரன், ஒன்றிய குழு தலைவர் பூ.அய்யாகண்ணு, ஒன்றிய குழு துணைத் தலைவர் வாசுகி ஆறுமுகம், ஒன்றிய துணை செயலாளர்கள், இரா.சிவக்குமார், பரசுராமன், மாவட்ட பிரதிநிதி தேவேந்திரன், மா.குப்புசாமி, இளைஞரணி அமைப்பாளர் இரா.சதிஷ்குமார், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி - ரூ.3500 கோடியில்

கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள்!

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன!

சென்னை, நவ.21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3500 கோடியில் 1 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ரூ.800 கோடியும் ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டத்திற்கு ரூ.600 கோடியும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்IIக்கு ரூ.347.50 கோடி வழங்கப்பட்டு பணிகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன.

கலைஞரின் கனவு இல்லம் - 2024-25

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 202425 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/ வீதம் மொத்தம் ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal AccountSNA) மூலம் தொகை நேரிடையாக பயனாளிகளுக்கு விடு விக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வரை முதற்கட்டமாக அரசால் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, இதுவரை பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.252 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர பயனாளிகள் பயனைடயும் வகையில், குறைந்த விலையில் சிமெண்ட் மூட்டைகள் TANCEM நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.48 கோடி செலவினம் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று, இரும்பு கம்பிகள் (Steel) நடைமுறையில் உள்ள விதிகளைப் பின்பற்றி ஒப்பந்த புள்ளி இறுதி செய்து உரிய விற்பனையாளரிட மிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞரின் கனவு இல்லம் 202425 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகள் அனைத்தும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் ஏற்கனவே, ரூ.300 கோடி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும், ரூ.500 கோடி வழங்கப்பட்டு வீடுகளின் கட்டுமானத்திற்கேற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

கலைஞரின் கனவு இல்லம் 202425 திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளின் கட்டுமான பணிகளும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளதால், இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம்!

200001ஆம் ஆண்டுக்கு முன்னர் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுதுநீக்கம் செய்யும் பொருட்டு ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்நிதியாண்டில் ஒரு இலட்சம் வீடுகளை சீரமைக்க அனுமதி வழங்கப்பட்டு, தேவைக்கேற்ப சிறு மற்றும் பெரும் பழுது நீக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது. இது நாள்வரை 15,350 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசால் ஏற்கனவே, ரூ.150 கோடி வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்சமயம் மேலும் ரூ.450 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டிற்குள் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் பழுதுநீக்கப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II 2024-25

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சிதிட்டம் II ன் கீழ் 202122 ஆம் ஆண்டு முதல் 202526 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களையும் முழுமையான வளர்ச்சி அடைந்த கிராமங்களாக மாற்றுவதற்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சிதிட்டம் II ன் கீழ், கிராம ஊராட்சியில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குளங்கள் / ஊருணிகள் புனரமைத்தல், பொது பயன்பாட்டு கட்டடங்களான கிராம ஊராட்சி அலுவலக கட்டடம், பொது விநியோகக் கடை மற்றும் அதற்கான கூடுதல் வசதிகள், அங்கன்வாடி கட்டடம் கட்டுதல், சமத்துவ சுடுகாடு /இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் மேம்படுத்துதல். தெருவிளக்குகள், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளான சந்தைகள் / கிராம விற்பனை கூடங்கள் / மீன் சந்தைகள் / சேமிப்பு கிடங்கு, கதிரடிக்கும் களம் / மீன் உலர்த்தும் முற்றம் போன்ற 53,779 பணிகள் கடந்த மூன்றாண்டுகளில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில், இத்திட்டத்தின் கீழ் 2,482 கிராம ஊராட்சிகள் 15,695 பணிகள் எடுக்கப்பட்டு, 12,722 பணிகள், முடிக்கப்பட்டுள்ளன. நாளதுவரை, அரசால் ரூ.347.50 கோடி விடுவிக்கப்பட்டு ஒற்றை சாளர வங்கி கணக்கின் (Single Nodal Account SNA) மூலம் நேரடியாக தங்கு தடையின்றி ஒப்பந்ததாரர்களுக்கு முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II ன் கீழ் அனைத்து பணிகளும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

மேற்குறிப்பிட்டவாறு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஏற்கனவே, பெறப்பட்ட ரூ.300 கோடியுடன் தற்போது ரூ.500 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதே போல் ஊரக குடியிருப்பு பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கும் பணிகளுக்காக ஏற்கனவே ரூ.150 கோடி அரசால் வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ரூ.450 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.347.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கலைஞரின் கனவு இல்லம் திட்டம், ஊரக குடியிருப்பு பழுதுபார்க்கும் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகள் முழுவீச்சில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் விருதுநகர் வடக்கு மாவட்ட சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

சிவகாசி மாநகரம்

அமைப்பாளர் எம். விஜயகுமார்
23, எ.வி.டி. புதூர்தெரு,
சிவகாசி,
விருதுநகர் மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் 1) ஆர். வைரமுத்து. 10/பி, வடக்கு மாடவீதி, திருத்தங்கல், விருதுநகர். 2) கி. முத்துராஜ். 368/எ1. கருணாநிதி காலனி, திருத்தங்கல், விருதுநகர். 3) ப. வசந்தகுமார். 62, அருண்நகர், விளாம்பட்டி ரோடு,சிவகாசி, விருதுநகர். 4) பி. மைக்கேல். 86/பி, பாண்டியன்நகர், 6வது ரோடு, சிவகாசி, விருதுநகர். 5) ப ஜோதி. முத்துமாரியம்மன் காலனி, பள்ளப்பட்டிதெரு, திருத்தங்கல், விருதுநகர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.11.2024

தயாநிதிமாறன், எம்.பி.,
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

முன்னாள் அமைச்சர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் 108வது பிறந்தநாள் விழா காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரும், கழக மாணவர் அணி செயலாளர், சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. இல்லத்தில் அன்னாரது திருவுருப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட பொருளாளர் சன்பிராண்டு கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.மகாலட்சுமியுவராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பர் அ.யுவராஜ், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எம்.பாபு, மாநகர அவைத்தலைவர் செங்குட்டுவன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சிகாமணி, மண்டலக்குழுதலைவர் எஸ்.மோகன், மாமன்ற உறுப்பினர்கள் த.விஸ்வநாதன், பி.நிர்மலா, சங்கர், பி.சுரேஷ், மற்றும் எம்.எஸ்.பாலன், மாரிமுத்து, கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் உடன் குடும்ப உறுப்பினர்கள் உள்ளனர்.